## ஜி எஸ் எம் பீ ரெக்னிக்கல் சேவிசஸ் (தனியார்) கம்பனி - 2017

---

வரையறுக்கப்பட்ட ஜி எஸ் எம் பீ ரெக்னிக்கல் சேவிசஸ் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானம் மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

(அ) நியமத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 11.21 ஆம் பிரிவின் பிரகாரம் ஓராண்டிற்கு மேற்பட்ட ரூபா 19,677,602 பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதனால் ஏற்படக்கூடிய நட்டக்கழிவை இனங்கண்டு கணக்குகளிற்கு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 17.19 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 51,796,097 கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட நிலையான சொத்துக்கள் கம்பனியால் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் நியாயமான பெறுமதியை சமர்ப்பிப்பதற்காக சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இற்றைப் பெறுமதியை மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நியமத்தின் 33 ஆம் அத்தியாயத்தின் 33.9 ஆம் பிரிவின் பிரகாரம் தொடர்புபட்ட தரப்பினர் மற்றும் அவர்களின் கட்டுப்பாட்டுச் சபைகளுடன் கம்பனியில் காணப்படுகின்ற உறவுமுறைகள் மற்றும் அத் தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான வைப்புக்களிற்கான வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக ஆண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் பெறப்பட வேண்டிய வட்டி வருமானம் முறையே ரூபா 2,489,764 மற்றும் ரூபா 2,721,586 ஆல் குறைவடைந்திருந்ததுடன் ஆண்டின் வட்டி வருமானம் ரூபா 237,313 ஆல் கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது பணிக்கொடைக்கான ஏற்பாடுகளின் போது 8 உத்தியோகத்தர்களிற்காக ஒரு வருட காலப்பகுதிக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 89,000 ஆல் கணக்குகளில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட போதிலும் வருமான வரிக்காக எதிரீடு செய்ய முடிந்திராத பொருளாதார சேவைக் கட்டணம் ரூபா 262,860 மேலும் பெற வேண்டிய மீதியாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(எ) வருமான வரி கணிப்பீட்டின் போது மூலதன படிகளை கணிப்பீடு செய்தல் தவறுகள் காரணமாக செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 468,959 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) பின்வரும் விடயங்களிற்காக நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிகளிற்கும் உரிய நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் வரி அறிக்கைகளின் பிரகாரமான மீதிகளிற்குமிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| விடயம் | | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு/ வரி அறிக்கைகளின் பிரகாரம் | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| கள உபகரணம் | | 30,348,748 | 29,719,328 | 629,420 |
| செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி | | 9,005,991 | 7,879,099 | 1,126,892 |
| பொருளாதார சேவைக் கட்டணம் - | வருமானம் | 823,872,505 | 828,484,677 | 4,612,172 |
| | பொறுப்புக்கள் | 1,186,660 | 1,209,652 | 22,992 |
| | பெற வேண்டிய தொகை | 5,497,285 | 4,142,423 | 1,354,862 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி - | வருமானம் | 823,872,505 | 828,484,677 | 4,612,172 |
| | செலவினம் | 16,477,724 | 16,569,694 | 91,970 |
| | செலுத்த வேண்டிய தொகை | 1,668,013 | 1,759,983 | 91,970 |

(ஐ) தொடர்புபட்ட தரப்பினரிற்காக பெற வேண்டிய மீதியாக நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த 1 ஆண்டு தொடக்கம் 6 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிக்காக அறவிடப்படாமல் காணப்படுகின்ற ரூபா 4,819,047 மீதிகள் உரிய நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதிகளாக காட்டப்பட்டிருக்காததுடன் உரிய நிறுவனங்களினால் அம் மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 11,775,525 கூட்டுத்தொகையான வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளும் கடன்பட்டோரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட ஜி எஸ் எம் பீ ரெக்னிக்கல் சேவிசஸ் (தனியார்) கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- முனைப்பழியுள்ள அபிப்பிரயத்திற்கான அடிப்படைப் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் கீழ் கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை அதிகாரச்சட்டத்தின் 7(ஆ) பிரிவு | கம்பனி முத்திரைத் தீர்வைக்காக பதிவுசெய்வதற்கோ அல்லது ரூபா 25,000 இற்கு மேற்பட்ட வேதனங்களை செலுத்தும் போது அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணத்தை அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு அனுப்பி வைப்பதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 136 மற்றும் 138 | கம்பனியின் உத்தியோகத்தர் முற்பணங்கள் மற்றும் கொள்வனவு செய்தல் முற்பணங்களை தீர்ப்பனவு செய்யும் போது உறுதிச்சீட்டுக்கள் அங்கிகரிக்கப்பட்டிருக்காத அல்லது சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (இ) | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான அங்கீகாரம் பெறப்படாமல் ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது 9 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 ஆகக் கூடிய எல்லையை விஞ்சி ரூபா 4,173,098 செயல்நிமித்த கட்டுநிதிகள் மற்றும் ரூபா 25,000 ஆகக் கூடிய எல்லையை விஞ்சி 14 சந்தர்ப்பங்களில் ரூபா 775,000 சிறு செலவுக் கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 5,000 சிறுசெலவுக் காசின் செலவின எல்லையை விஞ்சி 15 சந்தர்ப்பங்களில் ரூபா 249,355 செலவிடப்பட்டிருந்தன. |

மேலும் 2017/2018 ஆண்டு தொடர்பாக வழங்கப்பட்ட முற்பணங்கள் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் அத் திகதியிலுள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்படாமல் ரூபா 4,054,121 தொகையான 44 முற்பண மீதிகள் காணப்பட்டன.

(ஈ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

(i) 5.2 ஆம் பந்தி

பாதீட்டு மதிப்பீட்டுடன் சேர்த்து பாதீட்டு நிதி நிலைமைக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 8.3.3 ஆம் பந்தி

ஊழியரொருவரிற்கு செலுத்தப்பட வேண்டிய மிகையூதியம் ஆகக் கூடியது 02 மாத சம்பளமாக காணப்பட்ட போதிலும் அதற்கு முரணாக 3 மாத சம்பளம் மிகையூதியமாக கருதப்பட்டு 2016/2017 ஆம் ஆண்டில் ரூபா 7,879,524 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்த ஊழியர்களாக இருந்த கம்பனியின் அனைத்து ஊழியர்களிற்கும் மிகையூதியக் கொடுப்பனவின் போது வருகை கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய பிஈடி 03/2017 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகளை தயாரித்து இலாபத்தை இனங்காண்பதற்கு முன்னரே அவ் ஆண்டிற்கான மிகையூதியங்களாக ஊழியரொருவரிற்கு ரூபா 13,500 படி ரூபா 1,692,225 தொகை 2017 திசெம்பர் 29 இல் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2015 யூன் 17 ஆம் திகதிய பிஈடி 03/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

(i) 2.2 ஆம் பந்தி

ஊ (F) வகையின் பொது முயற்சிகளிற்கான தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் படிகள் வரிசை அமைச்சரின் ஒத்துழைப்பு மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரம் என்பவற்றின் அடிப்படையில் தீர்மானித்து செலுத்தப்பட வேண்டிய போதிலும் அத்தகைய அங்கீகாரமின்றி தலைவரிற்கு ரூபா 100,000 மாதாந்த படியும் பணிப்பாளரொருவரிற்கு ரூபா 6,000 மற்றும் மேலும் 03 பணிப்பாளர்களிற்கு ரூபா 11,000 படியும் பங்குபற்றல் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(ii) 2.8 ஆம் பந்தி

கம்பனியின் மூன்று பணிப்பாளர்களிற்காக ரூபா 100,000 படி ரூபா 300,000 கௌரவ படிகள் வரிசை அமைச்சரின் பரிந்துரை மற்றும் நிதி அமைச்சரின் அங்கிகாரமின்றி பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டிருந்தன.

(எ) 2011 பெப்ரவரி 11 ஆம் திகதிய பிஈடி/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | |
|---|---|
| (i) 02 மற்றும் 03 ஆம் பந்திகள் | கம்பனிக்கான வருடாந்த விளம்பர நிகழ்ச்சித்திட்டம் அல்லது சமூக பொறுப்புக்களை நிறைவேற்றும் நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 05 ஆம் பந்தி | கம்பனியின் விளம்பர மற்றும் மேம்படுத்தல் செலவினங்களிற்காக பாதீடு செய்யப்பட்ட ரூபா 3,648,000 எல்லையை விஞ்சி ரூபா 356,654 மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. |
| (iii) 06 ஆம் பந்தி | 4 அரச சார்பற்ற நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 100,000 இற்கு மேற்பட்ட நன்கொடை/ அனுசரணைக்காகவும் பொலன்னறுவை மணல் அகழ்வுச் செயற்திட்டங்களில் வேலை செய்யும் ஊழியர்களிற்கு பகிர்ந்தளிப்பதற்காக 3,768 கதிரைகளை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட ரூபா 3,195,264 இற்காகவும் நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தேறிய இலாபம் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 44,976,120 தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 83,956,128 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 38,980,008 ஆன முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. நிர்வாகச் செலவினம் ரூபா 14,206,920 ஆல் அதிகரித்த போதிலும் செயற்திட்டங்களிலிருந்தான வருமானம் ரூபா 68,050,331 ஆல் அதிரித்தமை மேற்படி நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிக்கான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் பிரதான செயற்பாடான மணல் அகழ்தல் மற்றும் மணலை விற்பனை செய்தல் செயற்திட்டங்கள் மற்றும் மணல் சந்தையினை நோக்கிய தாக்கம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பொலன்னறுவை மாவட்டத்தில் வெள்ளத்தினைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மாவட்டங்களில் மணல் பற்றாக்குறையினை நீக்குதல் ஆகிய நோக்கங்களுடன் 2008 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தினால் மன்னம்பிட்டிய பிரதேசத்தில் மணல் அகழ்வதற்காக கம்பனிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பொலன்னறுவை மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்திட்டங்களிற்காக முன்னுரிமை வழங்கி மணல் வழங்கப்பட வேண்டும் என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் அகழப்பட்ட அதிகளவு மணல்கள் பொலன்னறுவை பிரதேசத்தில் அமைந்துள் 03 கம்பனிகளிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மணல் பயன்படுத்தப்பட்டமை எவ் வகை செயற்பாட்டிற்காக எனும் தகவல்கள் கம்பனிக்கு சொந்தமாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பொலன்னறுவை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் வாரம் ஒன்றிற்கு 03 நாட்களிற்கு மாத்திரம் பொலன்னறுவை மாவட்டத்திற்கு வெளியே மணல் ஏற்றிச் செல்லுதல் காரணமாக அவ் மணல் உற்பத்தியில் 15 சதவீதம் மாத்திரம் மாவட்டத்திற்கு வெளியே விநியோகிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஏனைய மாவட்டங்களில் மணல் பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் சந்தையில் மணல் விலை அதிகரிப்பிற்கும் இது காரணமாக இருந்தது.

(ii) கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த 2 கனிய அகழ்வு மற்றும் விற்பனை செய்தல் செயற்திட்டங்களிலிருந்து ரூபா 625,207 வருமானம் பெறப்பட்டிருந்த போதிலும் செலவினம் ரூபா 1,308,760 ஆக காணப்பட்டதனால் ரூபா 638,553 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) கம்பனியால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக விளம்பரப்படுத்தல் மூலமொன்றாக கம்பனியின் இணையத்தளம் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெல்லவாய கொடிகம்பொக்க பளிங்கு படிம அகழ்வுச் செயற்திட்டத்திற்காக பளிங்குகளினை களஞ்சியப்படுத்துவதற்காக காணியொன்றை குத்தகைக்கு பெறுதல், பாலங்களின் அளவினை ஸ்தாபித்தல், பாதுகாப்பு நடவடிக்கைகளினை பேணுதல் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்காக முன்னைய ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை ரூபா 7,864,591 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய அகழ்வு நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2018 ஒக்தோபர் 15 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 மார்ச் 21 ஆம் திகதிய அமப/17/0530/704/009 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் யான்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தின் மணல் அகழ்வு நடவடிக்கைகள் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடு

உரிய முறையில் நிறைவேற்றுவதற்காக போதியளவு நிறுவன சக்தி மற்றும் உபகரண வசதிகள் கம்பனியில் காணப்படாததன் காரணமாக 2017 யூன் 27 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தனியார் துறையிலுள்ள அகழ்வாளர்களிற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் கம்பனியாலும் 27.5 ஹெக்டெயர்கள் பரப்பளவான காணிக்காக அகழ்வு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அகழ்வு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்த 2017 மே தொடக்கம் 2018 பெப்ரவரி வரை 911 கியூப் மணல் மாத்திரமே அகழப்பட்டிருந்தது.

(ஆ) கம்பனியால் அமுல்ப்படுத்தப்படுவதற்கு இணங்கப்பட்ட செயற்திட்டங்களின் மதியுரைச் சேவைகள் மற்றும் பரீட்சிப்புக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்காக போதியளவு விளம்பரப்படுத்தல் அல்லது முறையான நடைமுறையொன்று காணப்படாததுடன் கம்பனிக்கான இலாப கொள்கையும் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 1,202,988 மற்றும் செலவினம் ரூபா 2,651,214 ஆனமையால் ரூபா 1,448,226 கூட்டுமொத்தமான நட்டம் ஏற்பட்டிருந்தது. இச் செயற்திட்டங்கள் தொடர்பாக வெளித்தரப்பினர்களின் நிபுணத்துவ சேவையை பெற்றுக்கொள்வதற்காக மதியுரைக் கட்டணமாக ரூபா 2,115,000 செலவிடப்பட்டமையே செயற்திட்டங்களில் நட்டம் ஏற்பட்டமைக்கான காரணமாக இருந்தது. மதியுரை செயற்திட்டத்திற்காக வெளித்தரப்பினர்களின் நிபுணத்துவ சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனியின் தலைவரிற்கு வழங்கப்பட்ட 09 கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்களை வழங்குவதற்கு 2018 ஆகஸ்ட் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள**

.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொலன்னறுவை மணல் செயற்திட்டங்களில் மணலின் விற்பனை விலை, பகிர்ந்தளித்தல், மணலின் விநியோகம், ஊழியர்களின் சம்பளங்கள் போன்ற செயற்பாடுகள் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தில் நடாத்தப்பட்ட மாவட்டக் குழுக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது.

(ஆ) கம்பனியால் கனியச் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்ட 04 மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்களின் தலைமையில் நடைபெற்ற 14 மாதாந்த சுற்றாடல் குழு மற்றும் மதிப்பீட்டிற்கு பின்னரான குழு கூட்டங்களிற்காக அழைப்பின் பேரில் கம்பனியின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்த போதிலும் அதில் பங்குபற்றிய குழு உறுப்பினர்களிற்கு ரூபா 5,000 வீதமும் 07 முகாமைத்துவ உதவியாளர்களிற்கு ரூபா 2,000 வீதமும் ரூபா 659,000 கூட்டுத்தொகையான படிகள் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தன. இக் கொடுப்பனவிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சால் ஒழுங்கமைக்கப்பட்ட புது வருட விழாவிற்காக ரூபா 250,000 தொகையை செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை

அங்கீகரித்திருந்த போதிலும் அக் கொடுப்பனவு இன்னொரு தனியார் தரப்பிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது. முறையான வேண்டுகோளோ அல்லது மதிப்பீடொன்றோ சமர்ப்பிக்கப்பட்டிராத போது உரிய கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டமை மற்றும் தனியார் தரப்பிற்கான கொடுப்பனவு என்பன சர்ச்சைக்குரியதாக உள்ளன.

(ஈ) ஆண்டின் போது உத்தியோகபூர்வ பிரயாணத்திற்காக இணைந்த படி, எரிபொருள் படி மற்றும் போக்குவரத்துப் படிகளாக ரூபா 30 மில்லியன் மேலதிக பணத்தை செலவிட்ட போது உத்தியோகபூர்வ பிரயாணங்களில் செலவிடப்பட வேண்டிய உணவு மற்றும் தங்குமிடங்களிற்கான செலவினங்கள் மற்றும் ஏனைய செலவினங்களிற்காக ஆண்டின் போது நலன்புரிச் செலவினங்களாக ரூபா 4,248,572 தொகை செலவிடப்பட்டிருந்தது. இச் செலவினங்களில் பெரும்பாலானவை எந்தவொரு கட்டுப்பாடுமின்றி சிக்கனமற்றதாக செலவிடப்பட்டிருந்ததுடன் செலவின விலைப்பட்டியல்களை சமர்ப்பித்ததன் மூலம் பணம் மீளளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் உத்தியோகத்தரொருவரிற்கு ரூபா 21,000 படி நாளாந்தம் உயர் கட்டணத்தில் மூன்று அறைகள் பெற்றுக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் உத்தியோகபூர்வமாக பங்குபற்ற வேண்டிய ஆகக் குறைந்த பதவியணியினர் மாத்திரம் பங்குபற்றாததால் பங்குபற்றிய உத்தியோகத்தர் எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையான அறைகளிற்காக மேலதிகக் கொடுப்பனவு சந்தர்ப்பங்கள் மற்றும் தங்குமிட வசதிகளை வழங்கிய போது சிக்கனத்தை கருத்தில் கொள்ளாதமை என்பன தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(உ) மொங்கிலாறு ஓயா புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி ஒப்பந்தம் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் தனியார் கம்பனியொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஓயாவிலிருந்து அகற்றப்பட்ட 20,000 கியூப் மணலை விற்பனை செய்தல் விடயங்கள் வரையறுக்கப்பட்ட ஜீ.எஸ.எம்.பீ ரெக்னிக்கல் சேவிஸஸ் (தனியார்) கம்பனிக்கு பணிப்பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, 20,000 கியூப் மணல் மொத்தமாக அகற்றப்பட்டிருந்த போதிலும் அதில் 5,897 கியூப் மணலிற்காக தனியார் கம்பனிக்கு ரெக்னிக்கல் சேவிஸஸ் கம்பனியால் ரூபா 5,897,000 தொகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரூபா 28,915,663 பெறுமதியான 14,103 கியூப் மிகுதி மணல் தொடர்பான வருமானம் கம்பனியால் பெறப்பட்டிருக்காததுடன் எந்தவொரு தகவலும் கமபனியில் காணப்படவில்லை. கம்பனியால் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 பெப்ரவரி தொடக்கம் 2018 யூன் வரையான காலப்பகுதியின் போது கம்பனியில் சேவையாற்றிய இரண்டு தலைவர்களிற்கு புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தினால் உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்ட போது அக் காலப்பகுதிக்காக ரூபா 150,000 மற்றும் ரூபா 200,000 மாதாந்த கட்டணத்தில் வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்கியதென குறிப்பிட்டு 06 தனியார் நிறுவனங்களிற்கு கம்பனியால் ரூபா 4,800,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அங்கே உரிய வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதற்கான உறுதிப்படுத்தலொன்று பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அதில் ரூபா 600,000 தலைவரால் கம்பனிக்கு 2018 ஆகஸ்ட் 09 இல் மீண்டும் செலுத்தப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. தலைவரிற்காக வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்ளும் போது கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்காததுடன் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட 05 வாகனங்களிற்காக வாடகை உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூன் 17 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு

அங்கீகரிக்கப்பட்ட படிகள் தவிர்ந்த ஏதேனும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட முடியாத போதிலும்

(i) மன்னம்பிட்டிய மணல் அகழ்வுச் செயற்திட்டத்தின் கீழ் மாதாந்தம் ரூபா 20,000 படி மீளாய்வாண்டிற்காக ரூபா 240,000 கூட்டுத்தொகை தலைவரிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ii) பட்டப்பின் படிப்பு கற்கைநெறி ஒன்றிற்காக பணிப்பாளரொருவரால் செலுத்தப்பட்ட ரூபா 425,000 தொகை அப் பணிப்பாளரிற்கு மீளளிக்கப்பட்டிருந்தது. உரிய பட்டப்பின் படிப்பு 2018 யூலை 31 வரையிலும் பணிப்பாளரால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி ஸ்தாபிப்பிலிருந்து 17 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஎடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத் திட்டம் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் ஸ்தாபிப்பிற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளடங்கலாக 05-06 உத்தியோகத்தர்களினை கம்பனியின் பதவியணியினர் கொண்டிருக்க வேண்டியதுடன் கம்பனியினால் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களிற்காக ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அதற்கு முரணாக செயற்திட்டங்களின் 136 ஊழியர்கள் உள்ளடங்கலாக 2018 யூலை 31 இல் உள்ளவாறு 182 கம்பனியின் முழுமையான பதவியணியினர் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதில் எந்தவொரு தேவைப் பகுப்பாய்வோ அல்லது திறைசேரி அங்கீகாரமோ இல்லாமல் 2017 ஏப்ரல் 01 தொடக்கம் 2018 யூலை 31 வரை ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 77 ஊழியர்கள் காணப்பட்டதுடன் அவ் உத்தியோகத்தர்களின் தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனியின் செயற்பாடு மற்றும் கடமையினை நிறைவேற்றுவதற்கு கம்பனியில் அனுபவம் வாய்ந்த மற்றும் போதுமான பதவியணியினரொன்று காணப்பட்ட போதிலும், புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் 06 உத்தியோகத்தர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டதெனக் குறிப்பிட்டு மீளாய்வாண்டில் ரூபா 627,250 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய ஊழியர்களால் நிறைவேற்றப்பட்டிருந்த கடமைகள் எவையென உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அமைச்சரவை அங்கிகாரமின்றி 60 வயதிற்கு மேற்பட்ட 4 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(உ) புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தினால் முறையற்ற வகையில் தெரிவுசெய்யப்பட்ட நபர்களிற்கு கம்பனியால் ஒப்பந்த அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டு பணியகத்திலுள்ள வெவ்வேறு பதவிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2018 யூலை 31 வரை அவ்வாறான வகையில் 45 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 4.6 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

மணல் ஏற்றுவதற்காக 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 8,883,520 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஏற்றும் இயந்திரமொன்று மன்னம்பிட்டிய மணல் செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்படுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் பின்னர் இந்த இயந்திரம் மணல் ஏற்றுதலுக்கு பயன்படுத்தப்படாது தளத்தின் சிறிய வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டதுடன் மணல் ஏற்றுதலுக்காக வெளித் தரப்பினர்களிடமிருந்து குத்தகை அடிப்படையில் ஏற்றும் இயந்திரங்கள் பெறப்பட்டிருந்தன.

## 4.7 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கம்பனியின் வளங்கள்

கம்பனியினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு பாதுகாப்பு அமைச்சிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த சாரதியொருவரிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 294,300 தொகையும் 2018 ஆகஸ்ட் 27 வரை சனாதிபதி செயலகத்தின் சிறுநீரக நோய் தடுப்பு வேலைப் படையணிக்கு இணைப்புச் செய்யப்பட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரிற்காக ரூபா 232,800 தொகையும் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தன.

## 4.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள

.

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 133 ஆம் பிரிவின் பிரகாரம் பங்குதாரர்களின் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதனுடன் சேர்த்து வருடாந்த ஒன்றுகூடல் நடாத்தப்பட்டதுடன் அதற்காக ரூபா 1,031,445 செலவினம் ஏற்பட்டிருந்தது.

## 4.9 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் 29 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 665,000 கூட்டுத்தொகையான சிறுசெலவுக் காசுக் கட்டுநிதி வழங்கப்பட்ட போது பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொலன்னறுவை மணல் அகழ்வுத் தொழிலாளர்களிற்கு வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட கதிரைகளில் ரூபா 410,432 பெறுமதியான 484 கதிரைகளை பகிந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.10 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் யான்ஓயா செயற்திட்டத்திற்காக சேவைகளை வழங்குவதற்காக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்துடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அவ் உடன்படிக்கைக்கு முரணாக 17 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்திட்டப் பொறியியலாளர் ஒருவர் மேலதிகமாக சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் அச் சேவைகளை வழங்குவதிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 20,286,667 ஆக காணப்பட்ட போதிலும் அதன் செலவினம் ரூபா 20,382,617 ஆனமையால் கம்பனிக்கு ரூபா 95,950 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கான மணல் விநியோகிக்கும் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தனியார் நிறுவனமொன்றால் நிறைவேற்றுவதற்கு கையேற்கப்பட்ட தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கான மணல் விநியோகிக்கும் செயற்திட்டம் 2017 மே மாதத்திலிருந்து எந்தவொரு காரணமோ அல்லது பணிப்பாளர் சபை அங்கீகாரமோ இன்றி கம்பனியால் கையேற்கப்பட்டிருந்தது.

(ii) அங்கே அத் தனியார் நிறுவனத்தால் செலவிடப்பட்ட பணத்தை மீளளிக்கும் போது ஆரம்ப சுற்றாடல் ஆய்வு அறிக்கைக்காக கம்பனியால் அறவிடப்பட்ட ரூபா 1,103,895 தொகை மீளளிக்கப்பட்டிருந்ததுடன் அதில் உள்ளடங்கியிருந்த ரூபா 128,895 பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பன உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு செலுத்தப்பட்டிருந்ததால் மொத்த பணமும் மீளளிக்கப்பட்டதில் கம்பனிக்கு ரூபா 128,895 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(iii) மணல் விநியோகிக்கும் போது காணிகளை புனரமைப்பதற்காக கம்பனிக்கு பெறப்பட்டிருந்த ரூபா 3,855,425 தொகை வைப்புக் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டதன் காரணமாக ரூபா 502,881 பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பன செலுத்தப்பட வேண்டியிருந்ததால் அத் தொகை கம்பனிக்கு நட்டமாக இருந்தது.

(iv) 2017 யூலை மாதத்தில் செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அகழ்வு செய்யப்பட்ட காணி புனரமைப்பு மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக ஒரு வருடத்தை விட அதிக காலம் கடந்திருந்தமையால் 2018 யூலை மாதம் வரை ரூபா 5,491,433 தொகையான சம்பளங்கள், பாதுகாப்பு செலவினங்கள் மற்றும் வீட்டு வாடகைகள் போன்ற செலவினங்கள் ஏற்பட்டிருந்தன. கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 31 வரை புனரமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல

.

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சிநிரல்'' தொடர்பாக வரையறுக்கப்பட்ட ஜிஎஸ்எம்பீ ரெக்னிக்கல் சேவிசஸ் (தனியார்) கம்பனி அறிந்துகொண்டிருக்காததன் காரணமாக அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பாக இலக்கு கட்டங்கள் மற்றும் அத்தகைய இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆகஸ்ட் 20 இலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வரைபு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6.2 உள்ளகக் கணக்காய்வு**

கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தினை தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் 05 மாதங்களிற்காக கம்பனியின் உள்ளகக் கணக்காய்வாளராக சேவையாற்றியிருந்த போதிலும் பட்டியலிடப்பட்டவாறு கம்பனியின் 07 பிரதான பரப்புக்களின் கீழ் கணக்காய்வு வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**6.3 கணக்காய்வுக் குழு**

2003 யூன் 02 ஆம் திகதிய பிஎடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு 03 மாதங்களிற்கு ஒரு முறை கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் ஆண்டிற்காக 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

**6.4 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை**

**6.4.1 பெறுகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் பெறுகைத் திட்டம் விபரமாக தயாரிக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் 4.2.2 ஆம் பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுகைத் திட்டத்திற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகை நடைமுறையை பின்பற்றாமல் அல்லது குறித்துரைக்கப்பட்ட நடைமுறையொன்று இல்லாமல் கம்பனியின் ஊழியர்களிற்காக 28 வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் வாடகை வாகனங்களிற்காக ரூபா 17,874,853 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 13 வாகனங்களிற்குரிய ரூபா 6,215,211 தொகையை செலுத்தும் போது உரிய வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதென உத்தியோகத்தர்களின் சான்றிதழ்கள் மற்றும் ஓட்ட அட்டவணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6.4.2 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள**

2015 பெப்ரவரி 03 இல் ரூபா 2,584,750 வேலை ஆரம்பிப்பு முற்பணம் வழங்கப்பட்டிருந்த 2 செயற்திட்டங்கள் தொடர்பாக 2016 ஆகஸ்ட் 26 இல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்குரிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாமல் செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன.

**6.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

கம்பனியின் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்தை உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 13 சதவீதம் தொடக்கம் 1898 சதவீதம்

வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள | அவதானிப்புக்கள |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | (i) காசோலைகள் மூலம் மேற்கொள்ளக்கூடிய கொடுப்பனவுகளுக்கு சில்லறை காசு மூலம் கொடுப்பனவு செய்தல். |
| | (ii) களப் பரீட்சிப்புக்களிற்கான செலவினங்கள் மற்றும் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான செலவினங்களிற்காக சில்லறைக் காசு பயன்படுத்தப்படுதல். |
| | (iii) பிராந்திய நிலையங்களினால் சேகரிக்கப்பட்ட பணத்தை பாதுகாப்பாக வைப்பதற்கும் தாமதமின்றி வங்கியிலிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |
| | (iv) உத்தியோகபூர்வ பிரயாணங்களின் போது இணைந்த படிகளை செலுத்துவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (v) உத்தியோகபூர்வ பிரயாண நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அவற்றின் மதிப்பீடுகளிற்காக பிரிவுத் தலைவர்கள் அல்லது திணைக்களத் தலைவர்களிடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காமை |
| | (vi) செலவினங்கள் ஏற்படும் போது சிக்கனம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்காதமை. |
| | (vii) பல்வேறு பொது நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களிற்கு வழங்கப்பட்ட அன்பளிப்புக்கள் அவ் பொது நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்காமை. |
| (ஆ) மனித வளங்கள் முகாமைத்துவம் | மனித வளங்கள் திட்டம், ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டங்களினை தயாரிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்காமை. |
| (இ) வாகனங்களின் கட்டுப்பாடு | (i) வாகன ஓட்ட அட்டவணைகள் முறையாகப் பேணப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | வாகனங்களின் ஓட்ட விபரம் மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்துதல் தொடர்பாக பதிவேடுகள் பேணப்பட்டிராமை. |
| | | (iii) | வாகன வழங்குநர்களுடன் முறையாக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிராமை. |
| | | (iv) | பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய குறிப்புரைகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டிருக்காமை. |
| (ஈ) | முற்பணங்களை வழங்குதல் | (i) | முன்னர் வழங்கப்பட்ட முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படாமல் மீண்டும் முற்பணங்கள் வழங்கப்படுதல். |
| | | (ii) | முற்பணப் பதிவேடுகள் பேணப்படாமை. |
| | | (iii) | தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமாக காணப்படுதல். |
| (உ) | கொள்வனவுக் கட்டுப்பாடு | (i) | வழங்கல் சிட்டை மற்றும் பொருள் பெறுகைக் குறிப்பு என்பவற்றை பெற்றதன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்குப் பதிலாக சமர்ப்பிக்கப்பட்ட பொருள் கட்டளைகள் அல்லது விலைகளை அடிப்படையாகக்கொண்டு கொடப்பனவுகள் மேற்கொள்ளப்படுதல். |
| | | (ii) | கொள்வனவுகளிற்காக உரிய வழங்குநரின் பெயரில் முற்பணங்களை வழங்குதல். |
| | | (iii) | கொள்வனவு முற்பணங்களை வழங்கும் போது பிணைகளை பெறுவதற்கு/ உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |